

இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி ஊராட்சி ஒன்றியம், ஆயிரமங்கலம் ஊராட்சி சியாம்பாடி கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் ரூ.19.52 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்க கட்டிடத்தினை கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர், மாவட்டச் செயலாளர் ஆர்.காந்தி திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.ஜெ.யு. சந்திரகலா, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., அசோக், துணைத் தலைவர் ஜெ.ரமேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## துறைமுகத்தில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, டிச.31

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு ”அன்னம் தரும் அமுதக்கரங்கள் மாபெரும் திட்டத்தின் 313 ஆம் நாளான – கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்தநாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (29.12.2025), துறைமுகம் தொகுதி: 1) துறைமுகம் மேற்கு பகுதி: வட்டம் 59 அ, காந்திநகர் அண்ணா சாலை. 2) துறைமுகம் கிழக்கு பகுதி: வட்டம் 55, எழுகிணறு பூங்கா அருகில், ஏழு கிணறு தெரு. சென்னை ஆகிய பகுதிகளில் அமைச்சர் பி.கே.சேகர் பாபு அறுசுவை உணவு வழங்கினார்.

### தமிழ்மொழிக்கு ஒதுக்கிய நிதி எவ்வளவு? பிரதமர் மோடியின்

# போலி வேடத்தை தமிழ் மக்கள் ஒரு போதும் ஏற்க மாட்டார்கள்!

### விவசாயிகள் தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் அறிக்கை!

சென்னை, டிச. 31-

விவசாயிகள் -தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

பல்வேறு நாடுகளில் இளைய தலைமுறையினரிடம் தமிழ் மொழியை பரப்பதற்கான தொடர் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக மனதின் குரல் நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசி இருக்கிறார். நாடு கடந்து தமிழ் மொழியை பரப்புவது இருக்கட்டும், முதலில் உள்நாட்டில் தமிழ் மொழியை வளர்ப்பதற்கு எடுத்த முயற்சிகள் என்ன? செத்துப்போன மக்களால் பேசப்படாத சமஸ்கிருதத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? உலக அளவில் மக்களால் பேசக்கூடிய மூத்த மொழியான செம்மொழி தமிழுக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி எவ்வளவு? இதற்கு முதலில் மோடி அவர்கள் பதில் சொல்லட்டும்.



மாதம் தோறும் மனதின் குரல் என்ற நிகழ்ச்சியில் பிரதமர் மோடி பேசி வருகிறார்கள். அந்த அடிப்படையில் நேற்று பிரதமர் மோடி அவர்கள் பேசிய பொழுது, தமிழ் மொழியை உலக அளவில் உள்ள இளைய தலைமுறைகளிடம் எடுத்துச் செல்வதற்கான உரிய நடைமுறைகள் எடுக்கப்பட்டு வருவதாக கூறியுள்ளார்கள். குறிப்பாக தான் பிஜி நாட்டிற்கு சென்ற பொழுது அங்கு தமிழ் மொழி கற்பிக்கப்படுவதற்கு எடுக்கப்பட்டு வரும் முயற்சிகள் குறித்து பாராட்டுதலை தெரிவித்துள்ளார்.

இப்படி கூறிய பிரதமர் மோடி தமிழ் மொழியான செம்மொழியை வளர்ப்பதற்கு தமிழ் மொழிக்கு ஒதுக்கிய நிதி, எடுக்கப்பட்ட நடவடிக்கை இவைகள் குறித்து ஒரு வார்த்தையும் பேசவில்லை. மக்களால் பேசப்படாத சமஸ்கிருத மொழிக்கு ஒதுக்கியதில் 5 சதவீதம் கூட கோடிக்கணக்கான மக்களால் பேசக்கூடிய உலகின் மூத்த மொழியான செம்மொழிக்கு இதுவரை ஒன்றிய அரசு ஒதுக்காமல் துரோகம் செய்து வருகிறது.

கீழடி அகழ்வாய்வில் முதன் முதலில் கிடைத்த தொல்பொருட்களை பகுத்தாய்வு செய்த பொழுது கிடைத்த கால அளவு, இதன் மூலம் தமிழர்கள் பழமையான நாகரீகத்திற்கு சொந்தக்காரர்கள், இந்திய நாகரீகம் என்பது தமிழர் நாகரீகமே என நிரூபிப்பதற்கான ஆதாரங்கள் அடுக்கடுக்காக கிடைத்து வருகின்றன. தமிழ் இலக்கியங்களில் ஏட்டில் உள்ள நாகரிகத்திற்கு தொல்லியல் ஆதாரங்கள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. கீழடியைத் தொடர்ந்து ஆதிச்சநல்லூர், கொற்கை, மயிலாடும்பாறை போன்ற தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிடைத்துள்ள தொல்லியல் ஆதாரங்கள் மூலம் இரும்பை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள், இரும்பை பயன்படுத்துவதற்கான உலைகலன்களை ஏற்படுத்தியவர்கள் தமிழர்கள் என்பதும், தமிழர்களின் நாகரீகம் 5000 ஆண்டுகளை கடந்தது என்பது வெளிப்பட்டு உள்ளது.

இந்த ஆய்வு அறிக்கைகளை வெளியிட மோடி அரசு தயக்கம் காட்டுவது ஏன்? கீழடி அகழ்வாய்வையே நிறுத்த உத்தரவிட்டது ஏன்? கீழடி அகழாய்வை மாற்றி எழுத சொன்னது ஏன்? தமிழ் மொழி மீது ஆர்வம் இருக்குமேயானால் அந்த மொழியை பேசக்கூடிய தமிழர்கள், அவர்கள் வாழும் பகுதியான தமிழ்நாடு இவற்றின் மீது மோடி அரசுக்கு ஏன் அக்கறை இல்லை. உலகின் பழமையான நாகரீகம் தமிழர் நாகரிகம் என்றால் அது இந்தியாவுக்கு பெருமை தானே? கிரேக்க நாகரிகத்தை தாண்டி தமிழ் நாகரீகம் கொண்டுள்ள இந்திய நாகரீகம் தலைசிறந்த நாகரிகம் என உலக அளவில் பேசப்படும் தானே? ஏன் இதனை வெளியில் கொண்டு வர மோடி அரசு தயக்கம் காட்டுகிறது?

தமிழ்நாட்டில் தேர்தல் நேரம் நெருங்கி வருவதால் இப்போது மோடிக்கு தமிழ் மீது அபரிதமான அக்கறை. இங்கே வந்தால் தமிழைப் பற்றி பேசுவது. தமிழருடைய பழமையை பேசுவது. திருவள்ளுவரை, திருக்குறளை பேசுவது. ஒரிசா மாநிலத்தில் தேர்தல் நடைபெற்றால் அங்கே போய் ஒரிசாவின் அதிகாரத்தை, தமிழர்கள் கைப்பற்றுகிறார்கள் என்று பேசுவது. பீகாரில் தேர்தல் நடைபெற்றால் அங்கே சென்று தமிழர்கள் பீகாரிகளுக்கு எதிரானவர்கள் என்று தமிழர்கள் மீது வண்மம் கக்குவது. இது எல்லாம் என்ன நாகரீகம் என்ன பண்பாடு? என்பதை மோடி தான் விளக்க வேண்டும்

ஒரு பக்கம் தமிழினுடைய பெருமை பற்றி பேசுவது, இன்னொரு பக்கம் தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்வது, தமிழர்களை விமர்சிப்பது. இந்த இரட்டை வேடத்தை தமிழக மக்கள் புரிந்து கொள்வார்கள். உங்கள் தமிழ் வேடம் 2026 தமிழ்நாடு சட்டப்பேரவை தேர்தலில் ஒரு போதும் எடுபடாது. மக்கள் தெளிவான முடிவெடுத்து விட்டார்கள். தமிழ்நாட்டுக்காக அல்லும், பகலும் அயராது உழைத்து, அனைத்து நிலைகளிலும் தமிழ்நாட்டை முதல் நிலைக்கு கொண்டு வந்துள்ள திராவிட முன்னேற்றக் கழக தலைவர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களை மீண்டும் முதல்வராக்க தமிழ்நாட்டு மக்கள் எப்போதோ முடிவெடுத்து விட்டார்கள். இனியும் போலி தமிழ்ப் புகழ் பாடுவதை தொடர வேண்டாம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன், வானூர் சட்டமன்ற தொகுதி, வானூர் மத்திய ஒன்றியம், வானூர் ஊராட்சியில் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாநில ஆதிதிராவிடர் நல குழு இணை செயலாளர் செ.புஷ்பராஜ், மாவட்டப் பொறுப்புக் குழு உறுப்பினர்கள் எ.மாரிமுத்து, பிரேமா குப்புசாமி, ஒன்றிய கழக செயலாளர்கள் மைதிலி ராஜேந்திரன், பி.கே.டி.முரளி ச.புஷ்பராஜ், ஒன்றிய குழு பெருந்தலைவர் உஷா முரளி, பொதுக்குழு உறுப்பினர்கள் டி.ஆர்.இளங்கோவன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆலடி அருணா
### டிசம்பர் 31 (2004)



தமிழக சட்டப்பேரவை உறுப்பினராக மூன்று முறையும், நாடாளுமன்ற மக்களவை, மாநிலங்களவை உறுப்பினராகவும், தமிழக சட்டத்துறை அமைச்சராகவும், தி.மு.கழகத்தின் செய்தித் தொடர்புச் செயலாளராகவும் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பை எதிர்த்து நடைபெற்ற போராட்டத்திலும், விலைவாசி உயர்வு மறியல் போராட்டத்திலும் பங்கேற்று சிறை சென்றவர்.

“இளமைக் காலம் முதல் பகுத்தறிவு இயக்கத்தில் அவர் கொண்ட பற்றும் உறுதியும்; அரசியலில் ஏற்பட்ட மாறுபாடுகளால்கூட சேதாரமடையவில்லை” என தலைவர் கலைஞரால் புகழ்ந்துரைக்கப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

# ரீலும் ரியலும்!



பெரியாரும் அண்ணாவும் கட்டமைத்த
திராவிட பூகோளத்தில்

கலைஞர் எனும் அறிவாலய பல்கலைக் கழகத்தில்

முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும்
தளும்பாத தன்னிகரில்லா தலைமையால்

பட்டை தீட்டப்பட்ட
பவள விழா
வைரம் தான் உதயநிதி ஸ்டாலின் என்றால்..

முதிர்ச்சியும்
பயிற்சியும் இல்லாது

அவசரத்தில் வெளிப்பட்டு ஆட்டம்
போடுகிற

நிலக்கரித்
துண்டு தான்
அந்த
விட்டில் பூச்சி

இது

ரியலுக்கும் ரீலுக்குமான வேறுபாடு...



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

### டாக்டர் டி.பாண்டியராஜ் நிகழ்ச்சி ஏற்பாட்டில்

## தேனியில் 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் - அறுசுவை உணவு!

### மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் வழங்கி துவக்கி வைத்தார்!

தேனி, டிச. 31 –

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழாவையொட்டி , தேனி வடக்கு மாவட்ட மருத்துவர் அணி அமைப்பாளர் வைகை ஸ்கேன். டாக்டர் டி.பாண்டியராஜ் ஏற்பாட்டில், 3 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் மதிய உணவு விருந்து வழங்கும் விழா தேனியில் நடைபெற்றது.

ேனி வடக்கு மாவட்ட, தேனி வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் தலைமை வகித்து 3 ஆயிரம் பேருக்கு அறுசுவை உணவு வழங்கி துவக்கி வைத்தும், 3 ஆயிரம் பேருக்கு இலவச வேஷ்டிகள் மற்றும் சேலைகளை வழங்கும் பணியினை துவக்கி வைத்தார் .

இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட அவைத் தலைவர் செல்ல பாண்டியன், பெரியகுளம் சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் முத்துராமலிங்கம், தேனி தெற்கு நகர பொறுப்பாளர் நாராயண பாண்டியன், வடக்கு நகர பொறுப்பாளர் சூர்யா பாலமுருகன், பெரியகுளம் நகர செயலாளர் முகமது இலியாஸ், பெரியகுளம் வடக்கு ஒன்றியச் செயலாளர் வக்கீல் பாண்டியன், தேனி அல்லிநகரம் நகர் மன்ற தலைவர் ரேணுப்பிரியா பாலமுருகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாவட்டத் துணைச் செயலாளர் செந்தில்குமார், மாவட்ட அயலக அணி அமைப்பாளர் டாக்டர். வி.ஆர். ராஜன் , தேனி நகர் மன்ற துணைத் தலைவர் வக்கீல் செல்வம் , மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் வக்கீல். ராஜசேகரன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் சுரேஷ்குமார்,உயர் நீதிமன்ற வக்கீல் நிஷா,ந்த் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் ஆசைத் தம்பி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் ராஜேஷ், தேனி நகரத் துணைச் செயலாளர் மகாராஜன், மாவட்டப் பிரதிநிதி பண்ணை ரவி மற்றும் கு.ராம்தாஸ், தேனி வடக்கு மாவட்ட மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கிளைக் கழக நிர்வாகி கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், மற்றும் இளைஞரணி, மருத்துவர் அணி, மாணவரணி, மகளிர் அணி உள்ளிட்ட சார்பு அணி நிர்வாகிகள் மற்றும் பாகநிலை முகவர்கள் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



நாகர்கோவில் மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்கள் கூட்டமானது மாமன்ற கூட்ட அரங்கில் மேயர் ரெ.மகேஷ் தலைமையில் நடைபெற்றது. ஆணையாளர் நிஷாந்த் கிருஷ்ணா, துணை மேயர் ம.மேரி பிரின்ஸி லதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பாலசுப்பிரமணியன், சரவணன், மனோஜ் குமார், கெபின் ஜாய், ரகுராமன், இ.ஜவகர், கு.அகஸ்டினா கோகிலவாணி, பா.செல்வகுமார், உள்ளிட்ட மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாநகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.